**செ.வெ.எண்: 29** **நாள்: 15.10.2016**

**<u>பத்திரிகைச்செய்தி</u>**

புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடி தாலுகா கொக்குமுட்டை வருவாய் வட்டத்தில் 14.10.2016 அன்று அம்மா திட்ட சிறப்பு முகாம் மணமேல்குடி வட்டாட்சியர் திரு.சுரேஷ்கண்ணா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இம்முகாமில் பொதுமக்களிடமிருந்து வருவாய்த்துறை தொடர்பாக 17 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு, 17 மனுக்களுக்கும் உடனடி தீர்வு காணப்பட்டது.

இம்முகாமில் மணமேல்குடி வட்ட, தனி வட்டாட்சியர் (ச.பா.தி), வட்ட வழங்கல் அலுவலர், சிங்கவனம் சரக வருவாய் ஆய்வாளர், கொக்குமுட்டை கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வட்டாட்சியர் அலுவலகப்பணியாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**